## கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபை
## கொழும்பு மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 18 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நடப்பாண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து நன்கொடையாக கிடைத்த 04 கம்பூத்ஸ் இன் பெறுமதி ரூபா 8,400 ஆக இருந்த போதிலும் அது ரூபா 84,000 ஆக ரூபா 75,600 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கு வைக்கும் போது சரியான தன்மை தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | அம்பத்தலே வெவ படகு தளத்தை வாடகைக்கு வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 120,000 தொகையான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2012 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 212,210 தொகையான ஓய்வூதியப் பணிக்கொடைப் பணம் வைப்புக் கணக்கில் இருந்து அகற்றப்படாதிருந்ததுடன் உத்தியோகத்தரின் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட்ட ரூபா 38,671 தொகை வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சகல பெறுவனவுகளும் வருமானக் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | மீளச் செலுத்தும் வைப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட போதிலும் 2012.08.30 ஆம் திகதி ரூபா 212,210 தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்தமை காசேட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட்ட 38,672 தொகை வருமானத்துக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை அதனை 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டுக்குரிய ரூபா 409,542 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சகல செலவினங்களும் செலுத்த வேண்டிய கட்டணங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக நட்டஈடு கோரி தொடுக்கப்பட்ட 04 வழக்குகளில் 02 வழக்குகளுக்கான இழப்பீட்டின் பெறுமதி நிர்ணயிக்கப்படாதிருந்ததுடன் 02 வழக்குகள் தொடர்பாக ரூபா 911,742 தொகையான இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 57,856,134 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளுக்காக வழங்கப்பட்டுள்ள ஆரம்ப மீதியின் பெறுமதி மாற்றமடைந்ததன் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. ஆராய்ந்து பார்த்து பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விரிவான பட்டோலை மற்றும் உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 48,550,691 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டு முதல் சரியாக மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் இயந்திர உபகரணக் கணக்கு பேணிச் செல்லப்பட வேண்டி இருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட காணி உரித்துறுதி எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | 1,219,389 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் | நிதிப் பிரமாணத்தின் | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | 60,236,594 | பொது களஞ்சியம் மற்றும் மின்சார களஞ்சியத்தின் மீதி, பௌதீக இருப்பு மெய்மெய்யாய்வுப் பெறுமதி இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சுற்றறிக்கை | | | | |
| (i) | 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 3,257,800 | ஏதாவது விஷேட பணிகளுக்காக அன்றி பதவி நிலைத்தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடியது வரை வழங்கமுடியுமான உப கட்டுநிதி பதவி நிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 9 சந்தர்ப்பங்களின் போது ரூபா 131,250 முதல் ரூபா 1,000,000 வரையான வீச்சில் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | உப கட்டுநிதி வழங்கும் போது அரச நிதிச் சுற்றறிக்கை 3/2015 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2016 நவம்பர் 09 ஆம் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | - | கடை வாடகை மதிப்பீடு 03 வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | புதிய கடை வாடகை மதிப்பீட்டைக் கோரி 2018.10.12 ஆம் திகதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் களப்பரிசோதனை முடிவடைந்ததுடன் எதிர்வரும் மாதத்தில் அறிக்கை பெறமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதி 18(1) | - | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்தப்படுகின்ற வாடகைக்கு மேலதிகமாக கழிவுப்பொருட்களை வீட்டுக்கு வீடு சேகரிக்கும் செலவினங்களைத் தீர்ப்பதற்காக கழிவுப்பொருள் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | வீடுகள் மற்றும் வியாபராா நிலையங்களில் கழிவுப்பொருள் அறவிடும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டு புலனாய்வு உத்தியோகத்தருக்கு அதற்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 96,343,250 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 99,183,339 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கொலன்னாவ மக்கள் வங்கியில் 098-1-001-8-3913966 ஆம் இலக்க நடைமுறைக்கணக்கு 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் செயற்பாடற்று அத்திகதியில் கணக்கில் காணப்பட்ட பணம் அந்த வங்கியில் காணப்பட்ட 965 ஆம் இலக்க கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காலம் தேறாதிருந்த ரூபா 1,098,123 தொகையான காசோலைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 1,098,123 பெறுமதியான காசோலைகள் முன்னிருந்து கணக்குகளில் கொண்டுவரப்படுகின்ற தொகையாக இருந்ததுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) கொலன்னாவ மக்கள் வங்கியில் 098-1-001-8-3913965 ஆம் இலக்க நடைமுறைக்கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்று விபரங்களின் பிரகாரம் திகதி மற்றும் காசோலை இலக்கம் என்பன குறிப்பிடப்படாத ரூபா 28,197 தொகையான காசோலையை ஓய்வுபெறச் செய்யப்படாதிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 11 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,687 காசோலை தேறாதிருந்தது. | உரிய காசோலைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு சரி செய்யப்பட வேண்டும். | ரூபா 28,197 தொகையான காசோலைகள் குறிப்பாக இதுவரை கண்டறியப்படாதிருந்ததுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2012.09.11 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட தேறாத ரூபா 2,687 தொகையான காசோலையையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 53,472,000 | 46,574,845 | 49,928,698 | 43,971,690 | 54,202,384 | 48,439,066 | 57,976,651 | 60,692,872 |
| (ii) | வாடகை | 11,643,000 | 3,154,200 | 606,306 | 3,524,300 | 3,992,508 | 3,489,440 | 5,497,628 | 2,452,609 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,072,500 | 697,230 | 697,230 | - | - | 566,110 | 566,110 | - |
| (iv) | ஏனைய வருமானம் | - | 97,405,778 | 97,405,778 | - | - | 77,306,864 | 77,306,864 | - |
| | மொத்தம் | 66,187,500 | 147,832,053 | 148,638,012 | 47,495,990 | 58,194,892 | 129,801,480 | 141,347,253 | 63,145,481 |

### 2.3.2 ஆதன வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் நிலுவை ஆதன வரி மீதி ரூபா 40,888,466 தொகையில் ஆண்டின் போது ரூபா 18,169,836 தொகை அதாவது 44 சதவீதமும் நடப்பாண்டிற்குரிய ஆதனவரிகளில் ஆண்டின் போது ரூபா 30,218,642 தொகை அதாவது 62 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.04.30 ஆம் திகதி வரையில் 2018.12.31 உள்ளவாறு நிலுவைத் தொகையில் ரூபா 9,459,969 தொகை அதாவது 24 சதவீத அளவும் நடப்பாண்டில் ரூபா 23,271,314 தொகை அதாவது 52 சதவீத அளவும் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த 05 ஆதனவரிக் கணக்கில் அறவிட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா | அறவிட வேண்டிய சகல நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு தாமதமின்றி | • ஆதனவரி இலக்கம் 185- நிலுவைத் தொகை அறவிடுதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 621,308 ஆகும். அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது ஆதனங்களை தடை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | • ஆதனவரி இலக்கம் 35- என்ற ஆதனம் சபைக்குச் சொந்தமாக ஆதனம் ஆனமையால் சிட்டையிடல் நிறுத்தப்பட்டு நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கு பொதுச் சபை தீர்மானம் எடுத்துள்ளது.<br>• ஆதனவரி இலக்கம் 18- செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளது.<br>• ஆதனவரி இலக்கம் 134/32 மற்றும் ஆதனவரி இலக்கம் 01- நிலுவை ஆதனவரி அறவிடுவதற்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.<br>• இதுவரையிலும் அதிகாரப் பிரதேசத்தை மேவுகை செய்யும் வகையில் நடமாடும் சேவை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

2.3.3 **வாடகை**

------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அங்கொட சந்தியில் மாடி வீடொன்று மாதமொன்றிக்கு ரூபா 450 வாடகை அடிப்படையில் வாடகையாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த 03 வீடுகளின் வாடகைப் பணம் ரூபா 63,000 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வாடகைகைய அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.05.03 ஆம் திகதியில் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிலுவை செலுத்தாது புறக்கணித்துள்ளவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம்**

-------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கடந்த 04 வருடங்கள் முதல் சபை எந்தவொரு நீதிமன்ற | பெற வேண்டிய சகல | நீதிமன்ற தண்டப்பண வருமானமாக ரூபா |

| | | |
|---|---|---|
| தண்டப்பணத்தையும் அறவிடாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 24,000,000 தொகை கிடைக்கவேண்டியிருந்தது. | வருமானங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 24,000,000 பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் நீதவான் நீதிமன்றத்தினால் இன்னும் அது பரீட்சிக்கப்பட்டு எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு அமுல்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2017 இன் கீழ் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,499,259 தொகையான 02 வேலைகள் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக ஆரம்பிக்கப்படாமல் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் திட்டமிடலின் போது சகல தகவல்களையும் பெற்று அதனைப் பகுப்பாய்வு செய்து மக்களின் விருப்புக்கள் தொடர்பாகயும் ஆராய்ந்து அமுல்படுத்தப்பட வேண்டும். | ஓப்பந்தகாரரால் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இருக்கும் போது வீதியின் ஆரம்பப் பகுதியில் குடியிருப்பவர்களுக்குரிய இடத்திற்கு செல்வதற்கு முடியாத வகையில் எதிர்ப்பு காண்பிக்கப்பட்டமையால் பிரதம செயலத்திற்கு அறிவித்து செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளின் 6 வது அத்தியாயத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் கழிவுப் பொருட்களை முறையானதாக அகற்றுவதற்காக சபையினால் தற்போது பேணிச் | அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருள் பிரச்சினைகளுக்கு தீர்வாக கூட்டுப் பசளை செய்து மிகவும் | கூட்டுப் பசளைத் தளத்தில் தற்போது காணப்படுகின்ற 5 டொன் கழிவுப் பொருள் அளவுகள் மாத்திரம் கூட்டுப் பசளைக்காக ஈடுபடுத்தப்படுவதுடன் அதனை |

| | | |
|---|---|---|
| செல்லப்படுகின்ற கூட்டுப்பசளை தளத்தை விரிவுபடுத்துவதற்கு இடவசதிகள் இல்லாமையால் அதற்குப் பதிலாக அதிகாரப் பிரதேசத்தில் ஒட்டுமொத்தமாக உக்கும் கழிவுப் பொருள் கூட்டுப்பசளைளுடன் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உயிரியல் வாயு உற்பத்தி மற்றும் ஏனைய தொழில்நுட்ப முறைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆக்க பூர்வமாக ஈடுபடுத்த வேண்டும். | விரிவுபடுத்துவதற்காக போதிளவான இடவசதிகள் சபையிடம் காணப்படாமை பிரச்சினையாக இருந்தது. உக்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி தனியார் துறையின் உதவியைப் பெற்று உயிரியல் வாயு உற்பத்தி செய்யும் இயலுமை தொடர்பாக இந்த தினங்களில் விடயங்கள் ஆராயப்படுவதுடன் எதிர்காலத்தில் அது தொடர்பாக முறைமையொன்றை திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்திருகின்றோம். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் ஐந்து வருட திட்டமொன்று நிலைபேறான அபிவிருத்தி இலக்கை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு இலக்குகளுக்காகவும் வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கி நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளபடியான பதவியணியில் 26 வெற்றிடங்கள் காணப்பட்டன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | பிரதேச சபையினால் 07 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் நடப்பாண்டின் போது எந்த தவணைப் பணமோ அல்லது தொகையோ அறவிடப்படாத கடன் மீதி ரூபா 269,892 ஆகும். | கடன் பணத்தை மீள அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 06 ஊழியர்களுக்குரிய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஒரு ஊழியருக்கு உரிய சட்ட ஆலோசனை வழங்குவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பிரதேச சபைக்குரிய முல்லேரியாவ அம்பத்தலே வெவ படகு தளம்** | | |
| | பிரதேச சபைக்குரிய முல்லேரியாவ அம்பத்தலே வெவ படகு தளத்திற்குள் இறங்குதுறை மற்றும் அதற்குரிய கட்டிடம், காணி மற்றும் பூந்தோட்டம் என்பவற்றை தனியார் வியாபாரமாக நடத்திச் செல்வதற்காக மாதத்திற்கு ரூபா 10,000 தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | சகல நிலையான சொத்துக்கள் தொடர்பாக சட்ட ரீதியான உரித்து பெறப்பட வேண்டி இருந்ததுடன் சபைக்கு அறவிட வேண்டிய சகல வருமானங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சொத்துக்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கையளித்தல் கடிதத்தின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தமை தகவல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அத தொடர்பான எழுத்துமூல சான்றுகளை கண்டறிய முடியாதிருந்தமையால் அது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. கடிதம் கிடைத்ததன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். |
| (i) | இந்த ஆதணங்கள் சபைக்குரிய ஆதனமாகக் கருதி 03 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குரிய | | நிலுவை வாடகைப் பணத்தை செலுத்தமாறு அறிவிக்கப்பட்டதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைப்பணம் செலுத்தாததன் அடிப்படையில் வாடகையாளருக்கு எதிராக |

| | | | |
|---|---|---|---|
| | உரித்துறுதி. கையளித்தல் ஆவணம் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | இந்த ஆதனங்களின் ஆரம்ப உரிமையாளரிடமிருந்து சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மேற்கூறப்பட்ட வாடகையாளர் வாடகை செலுத்தாதிருந்ததுடன் நடப்பாண்டிற்குரிய நிலுவை வாடகை மற்றும் தண்டக் கட்டணமாக ரூபா 164,000 தொகை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | அங்கொட பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் 05 கடைகளில் அனுமதியற்ற நபர்கள் குடியிருந்து வருகின்றமை 2019 மார்ச் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட கடைகளில் அனுமதியற்ற நபர்களை அகற்றி அவற்றை திருத்தியமைத்து கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சபையின் சொத்துக்கள் சரியான பிரகாரம் பாதுகாக்கப்பட்டு வருமானத்தை உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். | இதுவரையிலும் அனுதியற்ற நபர்கள் அகற்றப்பட்டு கடைகளை திருத்தியமைத்து வாடகை அடிப்படையில் கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்
-------------------------------------------ஸ்ரீ--------------------

### உள்ளகக் கணக்காய்வு
---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு 2018ஆம் ஆண்டிற்காக பொதியளவான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(ஊ) இன் பிரகாரம் வினைத்திறனான உள்ளக கணக்காய்வு அமுல்படுத்தப் பட வேண்டும். | 2018ஆம் ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்காக 09 உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |